**<u>2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் அவரச கூட்டப் பொருள்</u>**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

1. திண்டிவனம் நகராட்சி பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21ன் கீழ் 3.50 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 அவர்களின் ந.க.எண்.20557/2020/இ3 நாள்: 11.12.2020 ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| நகராட்சி பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.கோடி) | சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 (ரூ.கோடி) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| திண்டிவனம் | 3.50 | 3.15 | 0.35 |

எனவே மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் ( மீ) | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | கெங்கையம்மன் கோயில் தெரு, வாஜ்பாய் நகர், ராஜகோபால் குறுக்கு தெரு, அய்யந்தோப்பு, கிருஷ்ணம்மாள் நகர்,ஆஸ்பிட்டல் ரோடு, அய்யாசாமி தெரு, ஏகாம்பரம் தெரு, மாரிமுத்து தெரு, அய்யிலு தெரு, தீர்த்தகுளம் , மாரியம்மன் கோயில் தெரு,பெருமாள் கோயில் தெரு மற்றும் எல்லை சந்து ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி அய்யாசாமி குறுக்கு தெரு,சேடன்குட்டை குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி (வார்டு எண் : 1,2,4,5,8,9,10,11,12,15) | 3.680 | 4.50 & 5.50 | 1.80 |
| 2 | உதய நகர், டி.எம்.ஜி.நகர்,காந்தி நகர், வகாப் நகர், தென்றல் நகர்,பிள்ளையார் கோயில் தெரு, செந்தமிழ் நகர், தரம்சந்த் நகர், ராஜாம்பாட்டை வீதி, சஞ்சீவிராயன்பேட்டை முதல் தெரு, 3வது தெரு,5வது தெரு, வசந்தபுரம் ரோஜா தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி துலுக்காணம் தெரு பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி (வார்டு எண் : 16,22,25,28,30,31,) | 4.050 | 4.50 & 5.50 | 1.70 |
| **மொத்தம்** | | **7.730** | | **3.50** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 60/2020/இ1)

நகராட்சி அலுவலகம்
நாள்:- 11.12.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
திண்டிவனம் நகராட்சி.

**<u>2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் அவரச கூட்டப் பொருள்</u>**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

**1.** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 ந.க.எண் : 20557/2020/E3 நாள் :15.12.2020 ம் தேதிய செயல்முறை உத்தரவில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP)–2020-21 நிதியின் கீழ் திண்டிவனம் நகராட்சி பகுதியில் கீழ்கண்ட சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூபாய் 350.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெறவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சிப்ப. எண். | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் ( மீ) | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கெங்கையம்மன் கோயில் தெரு, வாஜ்பாய் நகர், ராஜகோபால் குறுக்கு தெரு, அய்யந்தோப்பு, கிருஷ்ணம்மாள் நகர்,ஆஸ்பிட்டல் ரோடு, அய்யாசாமி தெரு, ஏகாம்பரம் தெரு, மாரிமுத்து தெரு, அய்யிலு தெரு, தீர்த்தகுளம் , மாரியம்மன் கோயில் தெரு,பெருமாள் கோயில் தெரு மற்றும் எல்லை சந்து ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி அய்யாசாமி குறுக்கு தெரு,சேடன்குட்டை குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி (வார்டு எண் : 1,2,4,5,8,9,10,11,12,15) | I | 3.680 | 4.00& 4.50 & 5.50 | 180.00 |
| 2 | உதய நகர், டி.எம்.ஜி.நகர்,காந்தி நகர், வகாப் நகர், தென்றல் நகர்,பிள்ளையார் கோயில் தெரு, செந்தமிழ் நகர், தரம்சந்த் நகர், ராஜாம்பாட்டை வீதி, சஞ்சீவிராயன்பேட்டை முதல் தெரு, 3வது தெரு,5வது தெரு, வசந்தபுரம் ரோஜா தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி துலுக்காணம் தெரு பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி (வார்டு எண் : 16,22,25,28,30,31,) | II | 4.050 | 4.00 & 5.50 | 170.00 |
| | **TOTAL** | | **7.730** | | **350.00** |

**அலுவலக குறிப்பு:–** அனுமதிக்கலாம்

**நகராட்சி அலுவலகம்** **தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**
**நாள்:- 17.12.2020** **திண்டிவனம் நகராட்சி.**

**<u>2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29–ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டப் பொருள்</u>**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

1. திண்டிவனம் நகராட்சி – பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு , நகரமைப்பு பிரிவு , வருவாய் பிரிவு , குடிநீர் மற்றும் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்கள், டெங்கு பணி ஒப்பந்த பணியாளர்கள் ஆகியோருக்கு நவம்பர் 2020ம் மாதத்திற்கான ஊதியம் வழங்கிட இந் நகராட்சி வருவாய் நிதி கணக்கில் போதிய நிதியிருப்பு இல்லாததாலும் , மாநில நிதிக்குழு ஆணையத்திடமிருந்து மாதம் தோறும் பெறப்படும்(SFC) மான்யத் தொகையில் குறைவான தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டு அத் தொகையில் ஒய்வூதியத்திற்காக குறிப்பிட்ட நிதியினை பிடித்தம் செய்தும், குடிநீர் திட்டப்பணிக்காக பெறப்பட்ட கடன் தொகைக்கு மாதத் தவணை தொகையும் பெருமளவு பிடித்தம் செய்துக் கொள்வதால் இந் நகராட்சிக்கு சொற்ப அளவிலேயே நிதி மானியமாக கிடைக்கப்பெறுகிறது. இதனால் நகராட்சி பணி செய்யும் ஒப்பந்த பணியாளர்களுக்கு மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு நவம்பர் 2020 மாத ஊதியம் வழங்குவதற்கு வருவாய் நிதியில் போதிய இருப்பு இல்லாத நிலை உள்ளது. அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் துப்புரவுப் பணியாளர்கள், நகராட்சி பணியாளர்கள் , ஒப்பந்த துப்புரவு பணியாளர், ஒப்பந்த டெங்கு பணியாளர் ஆகியோர்களுக்கு நவம்பர் 2020 ம் மாதத்திற்கான ஊதியம் வழங்க வேண்டிய அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 30.06.2020ம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.1167/2020/அ3ன் படி ஏற்கனவே 2019–2020ம் ஆண்டிற்கான 15 வது மத்திய நிதிக்குழு ஆணையத்திலிருந்து பெறப்பட்டுள்ள மான்யத் தொகையிலிருந்து ஊதியம் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி வருவாய் நிதி மற்றும் SFC நிதியில் போதிய நிதியிருப்பு இல்லாத காரணத்தாலும் நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் ஆகியோர்களுக்கு நவம்பர் 2020 மாத ஊதியம் வழங்கிட 15 வது மத்திய நிதிக்குழு ஆணையத்திலிருந்து பெறப்பட்டுள்ள மான்யத் தொகையிலிருந்து 2020–2021ம் ஆண்டிற்கு முதல் தவணைத் தொகை ரூ.1,07,07,464/–இந் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வழங்கிடவும் அத் தொகையினை நகராட்சி நிதிநிலைமை சீரானவுடன் பின்னர் ஈடு செய்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பணியாளர்களின் நலன் கருதி 15 வது மத்திய நிதிக்குழு மான்யத்திலிருந்து பெறப்பட்ட 2020–2021ம் ஆண்டின் முதல் தவணை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இயற்க்கை இடர்பாடுகள் – திண்டிவனம் நகராட்சி 25.11.2020 அன்று நிவர் புயல் காரணமாக கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உணவு தயார் செய்து வழங்கிட விழுப்புரம் மாவட்டம் ஆட்சியர் அவர்களின் அறிவுறைகளின்படி திண்டிவனம் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ1/5030/2020 நாள்.24.11.2020 மூலமாக ரூ.50,000/– பெறப்பட்டது. இதன்படி 25.11.2020, 26.11.2020 மற்றும் 27.11.2020 ஆகிய மூன்று நாட்களுக்கு காலை, மதியம் மற்றும் இரவு ஆகிய மூன்று வேலையும் கனமழையில் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு மற்றும் நிவாரப் பணி மேற்கொள்ள வெளி நகராட்சிகளிலிருந்து வந்திருந்த பணியாளர்கள் ஆகியோருக்கு உணவு தயார் செய்து வழங்கப்பட்டது. மேற்கண்ட மூன்று நாட்களுக்கு ரூ.85865/– (ரூபாய் எண்பத்தி ஐந்தாயிரத்து எந்நூற்று ஐம்பத்து அறுபத்து மட்டும்) செலவிடப்பட்டுள்ளது. இதில் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.50,000/–க்கு கூடுதலாக ரூ.35,865/– செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

3 அரசாணை எண்.170 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.3) துறை நாள்.27.12.2020ன் படி இந்நகராட்சிபகுதிகளில் 33 வார்டுகளிலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களை புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் இணைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விவரங்கள் சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/– (ரூபாய் பதினைந்து) என்ற அடிப்படையில் (இதில் படிவம் அச்சிடுதல் (Prepopulated form) ரூ.5/–, தகவல் சேகரிப்பு பணிக்கு ரூ.5/–, தகவல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5/– )செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் 7405 படிவங்களை அச்சடிப்பதற்கும், தகவல் சேகரிப்பு பணிக்கும், தகவல்களை இணையத்தில் பதிவேற்றம் செய்யவும் ஆகும் தோராயன செலவினம் ரூ.1.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நபர்களை கூடுதல் விவரம் சேகரித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி Saravana Student Xerox & Print out என்ற நிறுவனத்தில் படிவங்கள் அச்சடித்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2047/2020/எச்1)**

4. இந்நகராட்சிபகுதிகளில் கிராமிய கலைக்குழுவினரைக் கொண்டு வடகிழக்கு பருவமழை காரணமாக நன்னீர் தேங்குமிடங்களை ஏடிஸ் எஜிப்டி கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிப்பது குறித்தும், டெங்கு நோய்த்தடுப்பு முறை குறித்தும், கலைநிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு கூட்டங்களை அனைத்து பகுதிகளிலும் நடத்துவதற்கும், பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்த தோராய செலவினம் ரூ.150000/– (ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலககுறிப்பு :–</u>

தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3368 /2020/எச்1**

5. இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரப்படும் கணினி பிரிண்டர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான டோனர்கள் வாங்கிக் கொள்ள மன்றத் தீர்மான எண்.206 நாள்.31.08.2020ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு டோனர்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. தற்போது புதிய திட்டப் பணிகள் காரணமாகவும், வரிவசூல் குறித்த அறிவிப்பு நோட்டீசுகள் எடுக்கவும் சம்மந்தப்பட்ட பிரிவு எழுத்தர்கள் மற்றும் வருவாய் உதவியாளர்களால் கோரப்பட்டுள்ள தேவைப்பட்டியலின்படி புதியதாக 8 பிரிண்டர்கள் வாங்கப்பட்டுள்ளதால் அவற்றிற்கு தேவையான புதிய டோனர்கள் வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தகுதி வாய்ந்த கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்கிடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2460 /2020/பி2)**

6. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்படும் TN32–T5314 டிராக்டர் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 09.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | TN32–T5314 டிராக்டர் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல். | ரூ. 145000/– | எம்/எஸ். எம்.கே.எஸ். மோட்டார்ஸ், பாரத் நகர், பல்லாவரம். | ரூ. 142300/– |
| | | | எம்/எஸ். சரவண மோகன், பெயிண்டிக் ஒர்க்ஸ், பழைய பல்லாவரம். | ரூ. 149250/– |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள எம்/எஸ். எம்.கே.எஸ். மோட்டார்ஸ், பாரத் நகர், பல்லாவரம். நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2140/2020/எச்1)**

7. இந்நகராட்சி பகுதிகளில் கிராமிய கலைக்குழுவினரைக் கொண்டு வடகிழக்கு பருவமழை காரணமாக நன்னீர் தேங்குமிடங்களை கண்டறிந்து அப்புறப்படுத்துவது குறித்தும், டெங்கு நோய்த்தடுப்பு முறைகள் குறித்தும் பொது சுகாதாரம் சம்மந்தப்பட்ட செயல்பாடுகள் குறித்தும் கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு கூட்டங்களை அனைத்துப் பகுதிகளிலும் நடத்துதல் தொடர்பான 11.12.2020 அன்று விலைபுள்ளி கோரியதில் கீழ்கண்ட 3 கலைக்குழுக்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | கலைக்குழுவினர் பெயர் | நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1 | வடகிழக்கு பருவமழை காரணமாக நன்னீர் தேங்குமிடங்களை கண்டறிந்து அப்புறப்படுத்துவது குறித்தும், டெங்கு நோய்த்தடுப்பு முறைகள் குறித்தும் பொது சுகாதாரம் சந்பந்தப்பட்ட செயல்பாடுகள் குறித்து கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு கூட்டங்களை அனைத்து பகுதிகளிலும் நடத்துதல். | ரூ.150000/– | வெளிச்சம் கிராமியக்குழு | ரூ.15000/– |
| | | | ஆஸ்வின் ஆடல், பாடல் குழு | ரூ.17000/– |
| | | | மோகனம் கலைக்குழு | ரூ.19000/– |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள வெளிச்சம் கலைக்குழுவினர் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொதுமக்களுக்கு தொற்று நோய் பராமல் தடுத்திடும் பொருட்டு தனிஅலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு பணிமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3368/2020/ எச்1)**

8. இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பரவாமல் தடுப்பு நடிவடிக்கை மேற்கொள்ள லைசால் கிருமி நாசினி சப்ளை செய்ய 11.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை ஒரு லிட்டர் விலை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பரவாமல் தடுப்பி நடிவடிக்கை மேற்கொள்ள லைசால் கிருமி நாசினி சப்ளை செய்தல். | ரூ. 300000/– | M/S. Green Agro Environment Services, Madhuranthagam. | ரூ. 165.20/– |
| | | | M/S. The Thirupathur Agro Engineering & Srvices, Co-Op Centre Ltd, Thirupathur. | ரூ. 175.82/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள M/S. Green Agro Environment Services, Madhuranthagam. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2495/2020/எச்1)**

9. இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பாதிக்கப்பட்டு மரணமடைந்த பிரேதங்களை நல்லடக்கம் செய்யும் பணியாளர்களுக்கு முழு கவச உடை (PPE) சப்ளை செய்ய 11.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை ஒன்றின் விலை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பாதிக்கப்பட்டு மரணமடைந்த பிரேதங்களை நல்லடக்கம் செய்யும் பணியாளர்களுக்கு முழு கவச உடை (PPE) சப்ளை செய்தல் | ரூ. 200000/– | M/S. Green Agro Environment Services, Madhuranthagam. | ரூ. 430.50/– |
| | | | M/S. The Thirupathur Agro Engineering & Srvices, Co-Op Centre Ltd, Thirupathur. | ரூ. 472.50/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள M/S. Green Agro Environment Services, Madhuranthagam. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2432/2020/எச்1)**

10. இந் நகராட்சியின் அலுவலக சில்லறை செலவினப் பட்டியலுக்கு (PA) இதுவரை ரூ.1000/–ம் மட்டும் செலவிட அனுமதிக்கப்பட்டு அதன்படி சில்லறை செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந் நகராட்சி தேர்வு நிலை நகராட்சி என்பதாலும், தற்போதைய செலவினங்களுக்கேற்ப சில்லறை செலவினப்பட்டியல் (PA)க்கு ரூ.5000/– வரை செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

வருவாய் நிதியிலிருந்து சில்லறை செலவினப்பட்டியல் ரூ.5000/– வரை செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1180/2019/சி2)**

11. இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பரவாமல் தடுப்பு நடிவடிக்கை மேற்கொள்ள சோடியம் ஹைட்ரோ குளோரைடு சப்ளை செய்ய 11.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை ஒரு லிட்டர் விலை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் கொரானா வைரஸ் பரவாமல் தடுப்பு நடிவடிக்கை மேற்கொள்ள சோடியம் ஹைட்ரோ குளோரைடு சப்ளை செய்தல். | ரூ. 250000/– | M/S. Green Agro Environment Services, Madhuranthagam. | ரூ. 36.58/– |
| | | | M/S. Ikkadu Agro Engineering & Services Co-op Centre Ltd, Tiruvallur. | ரூ44.84/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள M/S. Green Agro Environment Services, Madhuranthagam. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2496/2020/எச்1)**

12. இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் பொது சுகாதார பிரிவு 33 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பு மேற்கொள்ள (Organic Disinfectant) இயற்க்கை கிருமி நாசினி சம்பளை செய்ய 11.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை ஒரு லிட்டர் விலை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் பொது சுகாதார பிரிவு 33 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பு மேற்கொள்ள (Organic Disinfectant) இயற்க்கை கிருமி நாசினி சம்பளை செய்தல். | ரூ. 900000/– | SR Traders, Erode. | ரூ.6147.80 /– |
| | | | Shri Sakthi Egency, Erode. | ரூ.5664/– |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் உள்ள Shri Sakthi Egency, Erode. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2812/2020/எச்1)**

13)ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகையை ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/ஆக உயர்த்தி பயனாளிகளுக்கு வழங்க அரசாணை எண் : 105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள்.19.10.2020–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணையில் இந் நிதி உதவியை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பினை ரூ.60,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயத்தி நிர்ணயம் செய்யப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட அரசாணையின்படி கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு செலவிடப்பட்ட தொகையினை அரசிடமிருந்து பெறப்பட்டு ஈடுசெய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 3247/2012/பி3

14. இந்நகராட்சி பழைய அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் சார் ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு மேல்தளத்தை சிப்காட் நிலம் எடுப்பு அலுவலகத்திற்கு பெயிண்டிங் வசதி, மின்சார வசதி மற்றும் கழிவறை வசதி செய்து வாடகை நிர்ணயம் செய்து வழங்குமாறு நேரடி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழைய அலுவலக மேல்தளத்தில் தேவையான பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ. 3,00,000/–க்கும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

15. இந்நகராட்சி முருங்கப்பாக்கம் மற்றும் காவேரிப்பாக்கம் பள்ளிகளில் 2KW and 3KW solar offgrid மற்றும் பேட்டரி பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றி அமைக்கவும், மேலும் மின்விசிறிகள், டியூப்லைட்கள் பழுது பார்க்கவும் அதற்கான மதிப்பீடு ரூ. 3,00,000/–க்கும் மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**16.** இந்நகராட்சி காட்ராம்பாக்கம் மற்றும் ரெட்டனை தலைமை நீரேற்று நிலையம் ,இறையானூார், நீர்உந்து நிலையம் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த பணி பின்வருமாறு நகர மன்ற அனுமதி பெற்று கால நீடிப்பு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | நகர மன்ற தீர்மான எண் தேதி | ஒப்பந்த காலம் |
|---|---|---|
| 1 | 95/31.07.2014 | 01.08.2014 முதல் 31.07.2015 வரை |
| 2 | 387/31.08.2015 | 01.08.2015 முதல் 31.07.2016 வரை |
| 3 | 989/31.08.2016 | 01.08.2016 முதல் 31.01.2017 வரை |
| 4 | 1101/28.02.2017 | 01.02.2017 முதல் 31.01.2018 வரை |
| 5 | 1101/28.02.2017 | 01.02.2018 முதல் 31.01.2019 வரை |
| 6 | 10/18.01.2019 | 01.02.2019 முதல் 31.01.2020 வரை |
| 7 | 314/29.11.2019 | 01.02.2020 முதல் 31.01.2021 வரை |

மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணி காலம் 31.01.2021—யுடன் முடிவடைவதால் மேற்படி பணியின் ஒப்பந்ததாரர் தனது 09.11.2020 ம் தேதிய கடிதத்தில் 09.07.2014ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் கால நீடிப்பு செய்து வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார்.மேற்படி பராமரிப்பு பணியை ஒப்பந்ததாரர் நல்ல முறையில் செய்து வருகிறார். எனவே மேற்கண்ட பணிக்கு 09.07.2014ம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் 01.02.2021 முதல் 31.01.2022 வரை ஒரு வருடத்திற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூபாய் 24,00,000/— க்கு குடிநீர் அவசியம் கருதி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :—**

மன்றம் அனுமதிக்கலாம்.

17. இயக்குனர், தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.0281/2020/அ3, நாள்14.12.2020 தேதியிட்ட கடிதத்தில் இளநிலை உதவியாளர்களுக்கான **28.12.2020 முதல் 29.01.2021 வரை** நடைபெறும் விரிவாக்கப் பயிற்சி (Comprehensive Training Course Batch – III)ல் இந் நகராட்சி இளநிலை உதவியாளர் திரு.K.அரிஸ்குமார் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பயிற்சிக்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.1000/— வீதம் 20 நாட்களுக்கான பயிற்சி கட்டணம் ரூ.20000/—(இருபதாயிரம் மட்டும் ) **தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்** என்ற பெயரில் வங்கி வரைவோலையாக அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது . மேற்கண்ட செல்வினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு —** 1)வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பயிற்சி வகுப்பில் கலந்துக் கொள்ள திரு.K.அரிஸ்குமார், இளநிலை உதவியாளரை கலந்துக் கொள்ள அனுமதிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2897 /2020/ சி1)**

18. இந்நகராட்சி வார்டு எண்கள் 1, 5,மற்றும் 9ல் உள்ள தொழில்வரி இனங்களை தற்போது கள ஆய்வு செய்து வணிகம் செய்யாத இனங்களை கண்டறிந்து நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட வார்டுகளில் கள ஆய்வு மேற்கொண்டு இந்த வார்டுகளில் உள்ள 91 இனங்கள் நீக்கம் செய்யப்பட வேண்டியவை என வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வரால் கண்டறியப்பட்டது. பின்னர் இந்த இனங்களை நீக்கம் செய்வது குறித்து குழாய் பொருத்துநர் மூலம் மேலாய்வு செய்து நீக்கம் செய்ய வேண்டியதன் உண்மை தன்மை உறுதி செய்யப்பட்டது. இந்த 91 இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகை ரூ.1066373/ ஆகும். (வார்டு எண் 1 -ரூ. 265618,வார்டு எண் 5- ரூ. 309514, வார்டு எண் 9- ரூ. 491241) எனவே மேற்படி 91 வரிவிதிப்புகள் மற்றும் அவற்றிற்கான நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகை ரூ.1066373/-ஐ நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

இந்த 91 இனங்கள் வருவாய் உதவியாளர் மற்றும் குழாய் பொருத்துநர் ஆகியோரால் சரிபார்க்கப்பட்டு தற்போது இந்த வணிக இனங்கள் தொழில் புரியவில்லை எனவும் கடைகள் காலிசெய்யப்பட்டு மூடப்பட்டு விட்டதாகவும் இந்த கடைகளின் பழைய உரிமைதாரர்களின் முகவரியும் கண்டறிய இயலவில்லை என கையொப்பமிட்டு சான்று அளித்துள்ளதன் அடிப்படையிலும் இந்த இனங்களை இனி வசூல் செய்ய மார்க்கமில்லாத காரணத்தினாலும் நகராட்சி சட்ட பிரிவு 118-ன் படி நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1106/2018/அ4)**

| TINDIVANAM MUNICIPALITY | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Profissonal Tax Deletion Report | | | | | | | |
| WARD-1- ANBARASAN | | | | | | | |
| S.NO | ASST.No | NAME | TRADE NAME | Adress | Period | | Amount |
| | | | | | from | to | |
| 1 | 043/5841 | Rajendiran S/o Pachaiappan | STEELS WORKS | 96D,Gingee Road | 2011-2012 | 2020-2021 | 5841 |
| 2 | 043/5846 | Sreenuvasan.S | SMALL HOTEL | 0,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 10679 |
| 3 | 043/5842 | Sakul Ameed | HOTEL | 96A,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 9405 |
| 4 | 043/5804 | Rajendiran S/O Veerapathiran | CEMENT BUSINESS | 235/88/2,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 4046 |
| 5 | 043/5016 | Dhansingh Goundar | AAA | 88A/3,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 6520 |
| 6 | 043/8127 | Velmurugan | PROVISIONAL STORE | 16,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 3270 |
| 7 | 043/5003 | Navanitham Chettiyar J.V | AAA | 85,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 8541 |
| 8 | 043/5019 | Sermalingam | AAA | 0,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 9097 |
| 9 | 043/5004 | Bankaru Chettiyar | AAA | 86,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 9405 |
| 10 | 043/5006 | Elavarasan.D | AAA | 88/1,Gingee Road | 2010-2011 | 2020-2021 | 3760 |
| 11 | 043/5014 | Mahaprabu S/O Appandaraj | AAA | 88F/3,Gingee Road | 2015-2016 | 2020-2021 | 3975 |
| 12 | 043/8126 | Sermalingam | AAA | 0,Gingee Road | 2002-2003 | 2020-2021 | 9179 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | 043/5001 | R Rathinam | AAA | 83/15 Gingee Road | 2010-2011 | 2020-2021 | 3490 |
| 14 | 043/5007 | Velayutham | AAA | 88/5 Gingee Road | 2014-2015 | 2020-2021 | 1830 |
| 15 | 043/5009 | Balagopal | AAA | 88/A Gingee road | 2010-2011 | 2020-2021 | 3940 |
| 16 | 043/5013 | Kannan | AAA | 88/G/4 Gingee Road | 2010-2011 | 2020-2021 | 9405 |
| 17 | 043/5802 | Adhikesavan | BUNK STALL | 83A Gingee Road | 2010-2011 | 2020-2021 | 7679 |
| 18 | 043/5804 | E Rajendiran | CEMENT BUSINESS | 235/88 Gingee Road | 2010-2011 | 2020-2021 | 4046 |
| 19 | 043/5832 | Kanthasamy | AAA | 88/10 Gingee Road | 2010-2011 | 2020-2021 | 35806 |
| 20 | 043/5843 | Nagoor Miran | PEERO PRODUCT | Gingee Road | 2010-2011 | 2020-2021 | 7314 |
| 21 | 043/8536 | N P Ranganathan | BUNK STALL | Gingee Road | 2010-2011 | 2018-2019 | 18940 |
| 22 | 043/5011 | Sulthan Ibrahim | AAA | 2/7 Irudhayapuram | 2010-2011 | 2020-2021 | 8917 |
| 23 | 043/5869 | xxx | BROKEN RICE MACHINE | 89/3 MGR Nagar | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 24 | 043/5811 | S Selvaraj | SMALL BUSINESS | 275/A Santhaimedu | 2010-2011 | 2020-2021 | 19016 |
| 25 | 043/5815 | Ravi | STD BOOTH | 166/88 Santhaimedu | 2010-2011 | 2020-2021 | 16315 |
| 26 | 043/5818 | Ananthan | STD BOOTH | 293/88 Santhaimedu | 2010-2011 | 2020-2021 | 16315 |
| 27 | 043/5838 | K Kanthan | AUTO REPAIR SHOP | Santhaimedu | 2010-2011 | 2020-2021 | 9629 |
| 28 | 043/5840 | Chettu | SMALL BUNK | Santhaimedu | 2010-2011 | 2020-2021 | 9779 |
| **WARD-5** | | | | | | | |
| 29 | 043/5103 | Gopi Achari | AAA | 21A,Ayyasamy Street | 1999-2000 | 2019-2020 | 3820 |
| 30 | 043/5862 | Venugopl | BUNK STALL | 54/28,Ayyasamy Street | 2010-2011 | 2020-2021 | 3760 |
| 31 | 043/8539 | Subramani.L Contractor | CONTRACTOR | 31,Ayyasamy Street | 2011-2012 | 2020-2021 | 15752 |
| 32 | 043/5105 | Ranganathan | AAA | 14A/2,Ayyasamy Street | 1999-2000 | 2019-2020 | 9675 |
| 33 | 043/5863 | Dhanaseiyapoopathy S/O Mari | BUNK STALL | 7/4,Ayyasamy Street | 2010-2011 | 2020-2021 | 3760 |
| 34 | 043/5102 | Munusamy Achari | AAA | 18,Ekambaram Street | 1999-2000 | 2020-2021 | 19330 |
| 35 | 043/5104 | Dhanasekaran | AAA | 13,Ayyasamy Street | 2010-2011 | 2020-2021 | 3700 |
| 36 | 043/5801-043/5801 | VELMURUGAN S/O.THANGAPANDAN | PROVISIONAL STORE | 57/24ahospital road | 2010-2011 | 2020-2021 | 10529 |
| 37 | 043/5861-043/5861 | NATARAJ S/O IYYASAMY | TAILOR | 38B,hospital road | 2010-2011 | 2020-2021 | 4046 |
| 38 | 043/6136-043/6136 | VENGATESAN S/O VARADHARAJ | TAILOR | hospital road | 2010-2011 | 2020-2021 | 9205 |
| 39 | 043/6142-043/6142 | DR.BALAMURUGAN S/O SHANMUGAM | CLINIC | 1/8hospital road | 2010-2011 | 2020-2021 | 10455 |
| 40 | 043/6143-043/6143 | SEENUVASAN S/O RAMALINGAM | PHOTO STUDIO | 26,hospital road | 2010-2011 | 2020-2021 | 9705 |
| 41 | 043/6146-043/6146 | GOVINDARAJAN S/O SREENUVASAN | STUDIO | 28/Bhospital road | 2010-2011 | 2020-2021 | 19390 |
| 42 | 043/6147-043/6147 | SEENUVASAN | SCREEN PRINTING | 28,hospital road | 2010-2011 | 2020-2021 | 19390 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 43 | 043/6148-043/6148 | XXXX | TAILOR | 29,hospital road | 2010-2011 | 2020-2021 | 9666 |
| 44 | 043/6149-043/6149 | GURUNATHAN .R | CYCLE STORE | 30,hospital road | 2010-2011 | 2020-2021 | 9378 |
| 45 | 043/6150-043/6150 | RAVI CHANDIRAN S/O VAITHIYANATHAN | SALOON | 31,hospital road | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 46 | 043/6151-043/6151 | BALA S/O VEERARAGAVAN | STD BOOTH | 32,hospital road | 2010-2011 | 2020-2021 | 19390 |
| 47 | 043/6152-043/6152 | KRISHNANA S/O THANDAVARAYAN | BUNK STALL | 33hospital road | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 48 | 043/6298-043/6298 | PALAN. P.G | AAA | 1/A,hospital road | 2010-2011 | 2020-2021 | 18340 |
| 49 | 043/6302-043/6302 | M.R.S. FINANCE | FINANCE | 1/B,hospital road | 2010-2011 | 2020-2021 | 35806 |
| 50 | 043/6304-043/6304 | MOORTHI | ADVOCATE OFFICE | | 2010-2011 | 2020-2021 | 19991 |
| 51 | 043/6306-043/6306 | BHAVANI FINANCE | FINANCE | 1/15hospital road | 2010-2011 | 2020-2021 | 34268 |
| **WARD-9** | | | | | | | |
| 52 | 043/6333 | Samuthira Ammal | SMALL BUNK | 20,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 3415 |
| 53 | 043/6190 | kuyandai velu S/O Ranganathan | RICE MERCHANT | 20,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 54 | 043/6327 | Elangovan.D | VIJAY SOUND SERVICE | 23,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 9329 |
| 55 | 043/6183 | BalaKrishnan | FINANCE | 32,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 18790 |
| 56 | 043/6308 | Perumal | GENERAL MERCHANT | 26,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 18453 |
| 57 | 043/6200 | Thaiyalan | SAWMILL | 53,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 19016 |
| 58 | 043/6182- | KANDAN S/O RANGARAJALU | ANURAG MUSIC CENTRE | 32,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 9705 |
| 59 | 043/6184-043/6184 | APPAVU NAINAR S/O KUNJAPPA NAINAR | PADMA TIFFEN CENTRE | 10/30/5,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 18790 |
| 60 | 043/6187-043/6187 | GUNASEKARAN S/O SELVARAJ | TEA STALL | 16,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 6520 |
| 61 | 043/6188-043/6188 | BALASUNDARAM | FLOWER DESIGNERS | 14,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 8541 |
| 62 | 043/6189-043/6189 | DURAISAMY S/O THANGAVELU | GENERAL MERCHANT | 5/4,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 9705 |
| 63 | 043/6201-043/6201 | SRIDHAR S/O PAVADAI SAMY | ARTS | 57,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 9705 |
| 64 | 043/6331-043/6331 | VENKATESAN | OLD PAPER SALES | 23,Eswaran Kovil Street | 2010-2011 | 2020-2021 | 3415 |
| 65 | 043/6156 | Vasanth Agro Centre | FERTILIZERS | 4,Rajaji street | 2010-2011 | 2020-2021 | 18790 |
| 66 | 043/6160 | Venugopal S/o Durairaj | KANNA PLASTIC WORKS | 27/14,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 67 | 043/6164 | Sekar S/O Subrayan | TEA STALL | 34,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10079 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 68 | 043/8507 | Seenuvasa Kumar S/O Gopalakrishan | CIGRETTE & BISCUIT WHOLE SALE BUSINESS | 28,Rajaji Street | 2013-2014 | 2020-2021 | 19188 |
| 69 | 043/5293 | Rahapadma Sulakshna | AAA | 54b,Rajaji Street | 2001-2002 | 2020-2021 | 38130 |
| 70 | 043/6166 | Manohar S/O Narayanan | AUDIO CASETTES | 36/1,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 71 | 043/5837 | Elumalai S/O Manikkam | BUNK STALL | 0,Rajaji Street | 2002-2003 | 2020-2021 | 3986 |
| 72 | 043/6168 | BalaKrishnan S/o Thangappn | BOOK STALL | 36/2,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 73 | 043/5290 | Hari Krishnan | AAA | 4,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9255 |
| 74 | 043/6157 | Ramalingam S/O Dharman | WATCH REPAIR | 5,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10829 |
| 75 | 043/6154 | Nagarajan S/O Munusamy | CHAPPLE MART | 2,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9329 |
| 76 | 043/6180 | Natrajan S/o Arumugam | SALOON | 62,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 77 | 043/5291 | Prabhu Finance | AAA | 23,Rajaji Street | 2001-2002 | 2020-2021 | 38130 |
| 78 | 043/6162 | Krishnan | PRESS | 27/14,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 79 | 043/6174 | Rajesh S/O Shanthilal | CHACKLET & BISCUIT AGENCY | 20/53B,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 80 | 043/6179 | ThagapandiyanS\O Nainar nadar | FIRE WOOD | 61,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9555 |
| 81 | 043/6181 | Elangovan S\O Ravichandiran | TEA STALL | 62,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9479 |
| 82 | 043/6176 | Sekar S\O krishnan | TAILOR | 60,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9705 |
| 83 | 043/6173 | Ravichandiran.V.N | ICE CREAMS | 51,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 4420 |
| 84 | 043/6155 | Karthikeyan S/o Sami Kannu | TAILOR | 3,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 9329 |
| 85 | 043/6177 | Anuman Press | PRESS | 60,Rajaji Street | 2010-2011 | 2020-2021 | 10079 |
| 86 | 043/5836 | Elumalai -Adilakshmi | BUNK STALL | 34,Hospital Road | 2010-2011 | 2020-2021 | 4046 |
| 87 | 043/5201 | Venugopal MRS Bus | AAA | 11,Hospital Road | 2010-2011 | 2020-2021 | 40890 |
| 88 | 043/5202 | Malasiya Electricals | AAA | 11,Hospital Road | 2010-2011 | 2020-2021 | 9555 |
| 89 | 043/5861 | Natraja S/o Iyyasamy | AAA | 38b,Hospital Road | 2002-2003 | 2020-2021 | 4046 |
| 90 | 043/5828 | Thirupulisamy Chettiyar | SMALL RICE STORE | 40A,Hospital Road | 2010-2011 | 2020-2021 | 9555 |
| 91 | 043/5833 | Ahmed | SMALL PROVESSIONAL STORE | 56/40,Hospital Road | 2010-2011 | 2020-2021 | 9329 |

**19.** திண்டிவனம் நகராட்சி தெருக்களின் சாலைகளில் வருகின்ற 2020 வடமேற்கு பருவமழையை முன்னிட்டு சேதமடையும் சாலைகளை பொதுமக்கள் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க Wet Mix Macadm (WMM) கொண்டு சரிசெய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. 5,50,000/—க்கும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்ற தீர்மான எண்: 246 நாள் 30.09.2020 ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை—28 அவர்களின் ந.க.எண்: 21976/2020/E2 நாள்: 10.12.2020 ம் தேதிய கடிதத்தில் மாநில பேரிடர் மேலாண்மை (SDRF) நிதியிலிருந்து ரூபாய்.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு SDRF நிதியிலிருந்து ரூபாய்.5.00 இலட்சமும் வருவாய் நிதியிலிருந்து ரூபாய் 50,000/— வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

20. இந்நகராட்சியில் எதிர்வரும் 2021 வறட்சி காரணமாக குடிநீர் பிரச்சனையை சமாளிக்கும் வகையில் கீழ்வரும் பணிகளை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் வறட்சி நிவாரண திட்டத்தின் ( SRDF—2021) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெறும் தொகையினை குடிநீர் நிதியில் ஈடு செய்து கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை(ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Hiring of private Agri well to taking of water | 5.00 |
| 2 | Water Supply through Hire Private Tanker Lorries - 1 Nos. | 10.00 |
| 3 | Water Supply through Hire Private Tanker Tractors- 1 Nos | 5.00 |
| | Total | 20.00 |

**அலுவலக குறிப்பு:—** மன்றம் அனுமதிக்கலாம்.

21 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்காக பொது இடங்களில் பயன்படுத்துவதற்கும், பொதுக்கழிப்பிடங்கள், சமுதாயக்கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நாசினியாக லெமன் கிராஸ் ஆயில் தெளிக்க 50 லிட்டர் தேவைப்படுகிறது என சுகாதார ஆய்வாளர் அவர்கள் கோரியுள்ளதற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரி விநியோகம் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டி தோராய செலவினத் தொகை ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.819/2020/எச்1**

22. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பணிகளுக்காக கீழ்கண்ட எண்ணிக்கையில் பிறப்பு அறிக்கை (படிவம்1), இறப்பு அறிக்கை (படிவம்2), இறப்பிற்கான காரணம் குறித்து தகவல் பெறுவதற்கான மருத்துவச்சான்று (மருத்துவமனை–படிவம்4), இறப்பிற்கான காரணம் குறித்து தகவல் பெறுவதற்கான மருத்துவச்சான்று (மருத்துவமனை அல்லாத மருத்துவ கவனிப்பு– படிவம்4A), தேவைப்படுகிறது. தமிழகஅரசின் அங்கிகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்துக்கொள்வதற்கும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ. 1.25 இலட்சத்தினை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் ஆவனசெய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பொருளடக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிறப்பு அறிக்கை (படிவம்1) | 10000 |
| 2 | இறப்பு அறிக்கை (படிவம்2) | 3000 |
| 3 | இறப்பிற்கான காரணம் குறித்து தகவல் பெறுவதற்கான மருத்துவச்சான்று (மருத்துவமனை–படிவம்4) | 2000 |
| 4 | இறப்பிற்கான காரணம் குறித்து தகவல் பெறுவதற்கான மருத்துவச்சான்று (மருத்துவமனை அல்லாத மருத்துவ கவனிப்பு– படிவம்4A) | 1000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3368/2020/எச்1)

23)இந்நகராட்சியில் வார்டு எண் 26–ல் கதவு எண் 23A,கிடங்கல் பிள்ளையார் கோயில் தெரு சொத்துவரி எண் –043/026/00305 க்கு உரிய கட்டிடத்தில் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம் வாடகை அடிப்படையில் இயங்கி வந்தது.மேற்படி அலுவலகம் 16.02.2015 அன்று முதல் குடியிருப்பு உபயோகமாக பயன்பாட்டில் உள்ளதால் காலி செய்யப்பட்டு மேற்கண்ட வணிக நிறுவனத்திற்க்கான சொத்துவரியை 01.04.2019 முதல் நீக்கம் செய்யவும், நிலுவை தொகையை ரூ.16080/ஐ கேட்பிலிருந்து தள்ளுபடி செய்து 01.04.2019 முதல் புதியதாக குடியிருப்பு சொத்துவரி நிர்ணயம் செய்யவும், மேற்படி சொத்துவரி விதிப்பு எண் 043/026/00305 –ஐ கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மன்ற வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4367/2019/அ2)**

24) இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு கருவூலக கணக்கில் வரவு வைக்கப்பட்டு வரப்படும் சேமநலநிதி கணக்கிற்கு **1998–99 முதல் 2013–2014 முடிய** வட்டி தொகை கணக்கிடப்பட்டு வட்டித்தொகை பெறவேண்டி உதவி இயக்குனர், உள்ளாட்சிநிதி தணிக்கை விழுப்புரம் அவர்களின் ஒப்புதலுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது. பிரேரணை ஆய்வு செய்து மேற்கண்ட ஆண்டுகளுக்கான வட்டி கணக்கீட்டு படிவத்தினை மாற்றியமைத்து தற்போதுள்ள கணினி சாப்ட்வேர் மூலம் புதிய படிவத்தில் தயார் செய்து திரும்ப அனுப்புமாறு உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குனர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சேமநலநதி கணக்குகளின் மீதான வட்டி கணக்கீடு பணியினை தாம்பரம் நகராட்சி, விழுப்புரம் நகராட்சி மற்றும் குடியாத்தம் நகராட்சி ஆகிய நகராட்சிகள் ராஜ்ரேவ் சாப்ட்வேர் சிஸ்டம் மூலம் மேற்கொண்டு வட்டித்தொகை பெறப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சி சேமநலநிதி கருவூல இருப்புகளின் மீதான இறுதி இருப்பு தொகைக்கு 2019–2020 வரை வட்டி கணக்கீடு, அலுவலக பணியாளர்கள், ஓய்வுபெற்ற பணியாளர்கள், இறந்த பணியாளர்கள் ஆகியோர்களின் சேமநலநிதி கணக்கிற்கு தனிநபர் வட்டி கணக்கீடு, சேமநலநிதி கணக்கில் சேர்க்கப்பட்ட, 6வது ஊதியக்குழு நிலுவை தொகைக்கு வட்டி கணக்கீடு ஆகியவற்றை ராஜ்ரேவ் சாப்ட்வேர் சிஸ்டம், சென்னை நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டு 2019–2020 வரை வட்டி தொகைக்கான பிரேரணை தயார் செய்யவும், தனிநபர் வட்டிக்கான பட்டியல் தயார் செய்து சமர்ப்பிக்கவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.3.50/–(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4004/2020/பி2)

25) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர்–12 அவர்களின் ந.க.எண்.7301/2012/சி1, 12.12.2020 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளபடி, கணினி பயன்பாட்டிற்கு தேவையான உபகரண பொருட்கள் Key Board -10 எண்ணிக்கை, மற்றும் Mouse-10 எண்ணிக்கை ஆகியவற்றை வாங்குவதற்கு விலைப்புள்ளி கோருவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.15,000/–ற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியங் கருதி விலைப்புள்ளி பெற்றதையும் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3705/2020/பி2)

26)இந்நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கையினை முன்னிட்டு அனைத்து ஆய்வு கூட்டங்களும் கணினியில் காணொளி காட்சி மூலம் நடைபெற்று வருவதால் கணினி பராமரிப்பிற்கு கீழ்காணும் விவரப்படி கணினி உபகரணப் பொருட்கள் அவசியம் தேவை ஏற்படுகிறது.

1. Power cable Port 1.5 meter – 5 Nos.
2. Key Board & Mouse – 10 Nos
3. Logitech Web Camera C270 _ 3 Nos
4. Creative A 35 Speaker _ 3 Nos
5. Epson 127 Color ink catridges _ 1 No

மேற்கண்ட விவரப்படியான கணினி பயன்பாட்டிற்கு தேவையான உபகரணப் பொருட்களை வாங்குவதற்கு விலைப்புள்ளி கோருவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.42000/—ற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியங் கருதி விலைப்புள்ளி பெற்றதையும் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2923/2020/பி2)

27)நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்.930/2020/விமா2, நாள். 12.10.2020—ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரோஷணை கிராமம், வார்டு—A, பிளாக்—10, நகரளவை எண்.26/2 (சர்வே எண். 107/1B)—ல் 0.68½ ஏக்கர் (அ) 2772.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி உத்தேச சாலைகள் தார்சாலையாக அமைத்து சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ‘A’ வினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டள்ளது.

மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின் படி உத்தேச சாலை பொறியியல் பிரிவு ஒப்புதல்படி தார்சாலையாக மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்டு, உத்தேச சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ‘A’ வினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2706/2020/எப்1)

28)இந் நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள IDSMT கடை எண் 9–ன் குத்தகை இன வரி விதிப்பு எண். 043/454 திரு. R.பாலசுந்தரம் என்பவர் பெயரில் குத்தகை உரிமம் உள்ளது. மேற்படியாரும் திரு.S.யாசின் என்பவரும் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்து வந்ததாகவும் திரு.R.பாலசுந்தரம் என்பவரின் மகளின் திருமண செலவிற்காக தொகையை பெற்றுக்கொண்டு கூட்டுவியாபாரத்திலிருந்து விலகிக்கொண்டுவிட்டதாகவும், மேற்படி கடையை தன்னுடன் கூட்டு வியாபாரம் செய்து வந்த திரு.S.யாசின் த/பெ.அப்துல் சுக்கூர் தொடர்ந்து நடத்திக்கொள்ளுமாறும் அதற்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையை தொடர்ந்து செலுத்தவும் , குத்தகை உரிமையை திரு.S.யாசின் என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ளவும் சம்மதம் தெரிவித்து 24.06.2020ல் திரு.அஜ்மல் அலி நோட்டரி பப்ளிக் முன்னிலையில் ரூ.20 மதிப்புள்ள பிரமான பத்திரத்தில் கையொப்பமிட்டு வழங்கியுள்ளார்கள். திரு.S.யாசின் என்வராலும் மேற்படி கடையினை பெயர் மாற்றம் செய்து தர 23.10.2020ம் தேதியில் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி மனுவிற்குரிய அரசாணை எண் 92 நாள்.03.07.2007ல் அனுமதியற்ற அனுபோதகரின் நேர்வில் ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய 12 மாத வாடகைக்கு சமமான தொகையை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தொகையை சேர்த்து முன் பணமாகவும், மேலும் அரசாணை பக்கம் எண் 4 வரிசை எண் 5ல் குறிப்பிட்டுள்ளவாறு குறைந்தளவு தொகைக்குட்பட்டு 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாக செலுத்தி பெயர் மாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள IDSMT கடை எண் 9–ன் குத்தகை இன வரி விதிப்பு எண். 043/454 என்ற கடை திரு. R.பாலசுந்தரம் என்ற பெயரிலிருந்து திரு. S.யாசின் என்ற பெயருக்கு குத்தகை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குத்தகைதாரர் உடல்நிலை சரியில்லாத தொடர்ந்து கடையை நடத்த இயலாத காரணத்தைக் கருத்தில் கொண்டு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்களை செலுத்திய பின் குத்தகை இனத்தினை பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1041/2020/அ1)

29)இந் நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள IUDP கடை எண் 12–ன் குத்தகை இன வரி விதிப்பு எண். 043/432 திருமதி.T.சந்திரா என்பவர் பெயரில் குத்தகை உரிமம் உள்ளது. திருமதி.R.சுதா என்பவருடன் கூட்டு வியாபாரம் செய்து வந்ததாகவும் திருமதி.T.சந்திரா என்பவர் வயது முதிர்வு காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து கூட்டு வியாபாரம் செய்ய இயலாததால் அதிலிருந்து விலகி கொண்டாதகவும் மேற்படி கடையை தன்னுடன் கூட்டு வியாபாரம் செய்து வந்த திருமதி.R.சுதா தொடர்ந்து நடத்திக்கொள்ளுமாறும் அதற்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையை தொடர்ந்து செலுத்தவும் , குத்தகை உரிமையை திருமதி.R.சுதா என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ளவும் சம்மதம் தெரிவித்து 10.09.2020ல் திரு.S.ராஜாராமன் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் ரூ.100மதிப்புள்ள பிரமான பத்திரத்தில் கையொப்பமிட்டு வழங்கியுள்ளார்கள். திருமதி. R.சுதா என்பவரும் 16.09.2020ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்கண்ட கடையினை தனது பெயருக்கு மாற்றம் செய்து தர விண்ணப்பித்துள்ளார்.மேற்படி மனுவிற்குரிய அரசாணை எண் 92 நாள்.03.07.2007ல் அனுமதியற்ற அனுபோதகரின் நேர்வில் ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய 12 மாத வாடகைக்கு சமமான தொகையை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தொகையை சேர்த்து முன் பணமாகவும், மேலும் அரசாணை பக்கம் எண் 4 வரிசை எண் 5ல் குறிப்பிட்டுள்ளவாறு குறைந்தளவு தொகைக்குட்பட்டு 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் செலுத்தி பெயர் மாற்றம் செய்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள IUDP கடை எண் 12 குத்தகை இன வரி விதிப்பு எண். 043/432 என்ற கடை திருமதி.T.சந்திரா என்ற பெயரிலிருந்து திருமதி.R.சுதா என்ற பெயருக்கு குத்தகை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குத்தகைதாரர் உடல்நிலை சரியில்லாத தொடர்ந்து கடையை நடத்த இயலாத காரணத்தைக் கருத்தில் கொண்டு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்களை செலுத்திய பின் குத்தகை இனத்தினை பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1041/2020/அ1)

30)இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்காக பொது இடங்களில் பயன்படுத்துவதற்கும், பொதுக்கழிப்பிடங்கள், சமுதாயக்கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நாசினியாக லெமன் கிராஸ் ஆயில் தெளிக்க 100 லிட்டர் தேவைப்படுகிறது என சுகாதார ஆய்வாளர் அவர்கள் கோரியுள்ளதற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரி விநியோகம் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டி தோராய செலவினத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். /2020/எச்1

31)இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கும், பொதுக்கழிப்பிடங்கள், சமுதாயக்கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நாசினியாக பயன்படுத்துவதற்கு டியோ டிசின் திரவம் 150 லிட்டர் தேவைப்படுகிறது ஒப்பந்தப்புள்ளி கோரி விநியோகம் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டியும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ. 1.25 இலட்சத்தினை பொது நிதியில் செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். /2020/எச்1

32)இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கும், பொதுக்கழிப்பிடங்கள், சமுதாயக்கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நோய் பரப்பும் பூச்சிகளை அழிப்பதற்கு பயன்படுத்துவதற்கு ரெடிமிக்ஸ் திரவம் 150 லிட்டர் தேவைப்படுகிறது ஒப்பந்தப்புள்ளி கோரி வினியோகம் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டியும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ. 1.25 இலட்சத்தினை பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். /2020/எச்1

**நகராட்சி அலுவலகம்**
**நாள்:- 29.12.2020**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**
**திண்டிவனம் நகராட்சி.**